# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## க.பொ.த உயர்தர மாதிரிப் பரீட்சை 1 -2020

## இந்துநாகரிகம்

சுட்டெண் : ............... நேரம் : 3.00 மணித்தியாலம்

### பகுதி II

**01.** ஆன்மா பற்றிய சைவ சித்தாந்த சிந்தனைகளை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.
1. ஆன்மாவின் உண்மைத்தன்மை
2. ஆன்மாவும் அவத்தைகளும்
3. ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பு
4. மலங்களை அறுக்கும் வழியும் முத்திநிலையும்

**02.** “வேதமோடாகமம் மெய்யாம் இறைநூல்” வேதம் ஆகமம் பெறும் முக்கியத்துவத்தை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க
1. வேதகால இறைக் கொள்கை
2. வேதகால வழிபாட்டு முறைகள்
3. ஆகமங்கள் கூறும் சமய அனுட்டானங்கள்
4. ஆகமங்களின் தத்துவ சிந்தனைகள்

**03.** தமிழகத்தில் ஏற்பட்ட இந்துசமய பண்பாட்டு வளர்ச்சியை கீழ்வரும் தலைப்புக்களில் ஆராய்க
1. சங்ககாலத்தில் சிவவழிபாடு
2. பல்லவ அரசர்களும் பண்பாட்டு வளர்ச்சியும்
3. சோழர்கால கோயில்களும் பண்பாட்டு வளர்ச்சியும்

### பகுதி 11

01. இலங்கையில் பொலனறுவைக்கால இந்துசமய வளர்ச்சியை இலக்கியங்கள், தொல்பொருட்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

02. வேதாந்தக் கோட்பாடுகளில் சங்கரரது அத்வைதக் கோட்பாட்டின் அடிப்படைச் சிந்தனைகளை மதிப்பிடுக.

03. தமிழக வரலாற்றில் பல்லவர் காலக் கட்டடக் கலை வளர்ச்சிப் படிநிலைகளை ஆராய்க.

04. இந்துநாகரிக வரலாற்றில் அறவியல் சிந்தனைகள் முக்கியம் பெறுகின்றமையை தர்மசாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

05. இந்துக்கள் வழிபாட்டோடு மருத்துவ சிந்தனைகளையும் கொண்டிருந்தனர் என்பதனை எடுத்துக்காட்டி, இந்துமருத்துவத்தின் முக்கியத்துவத்தினையும் மதிப்பிடுக.

## பகுதி 1

01.

1. ஆன்மாவின் உண்மைத்தன்மை
   - ➢ சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையினை பிரத்தியெட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் என்னும் அளவைகளைக் கொண்டு உண்மைப்படுத்துகின்றது.
   - ➢ ''பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
     பதியினைப் போல் பசு பாசம் அனாதி''
     (திருமந்திரம்)
   - ➢ ''ஏகன் அனேகன் இருள் கருமம் மாயை
     இரண்டு
     ஆக இவை ஆறு ஆதி இல்''
     (திருவருட்பயன்)
   - ➢ ''உளதில தென்றலின் எனதுடலென்றலின்
     ஐம்புலன் ஒடுக்கம் அறிதறிற் கண்படில்
     ஊண்டி வினையின்மையின் உணர்த்தவுணர்தலின்
     மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா''
     (சிவஞானபோதம்)

2. ஆன்மாவும் அவத்தைகளும்
   காரணாவத்தை காரியாவத்தை
   காரணாவத்தை – கேவலாவத்தை
   சகலாவத்தை
   சுத்தாவத்தை

   கேவலாவத்தை - அறியாமை இருளில் மூழ்கி இருத்தல்
   ''நெல்லிற்குமியும் திகழ் செம்பிற்களியும்
   சொல்லிற் புதிதன்று தொன்மையே
   வல்லி மல கன்மம் அன்றுளவாம்……..''
   (சிவஞானபோதம்)

சகலாவத்தை – மாயையை முற்காரணமாகக் கொண்டு தனு கரண புவன போகங்களை வழங்கும் போது மலத்திற்குட்பட்ட நிலை

''விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து…….

❖ சார்ந்ததன் வண்ணமாக இருத்தல்
''சத்தசத்தத்தைச சாரா தசத்தறிய தங்கண்
இவை உய்த்தல் சதசத்தாம் உயிர்''

காரியாவத்தை – சாக்கிரம் சொப்பனம் சுமுத்தி துரியம் துரியாதீதம்
(நனவு கனவு உறக்கம் பேருருறக்கம் உயிர்ப்படங்கள்)

- மூவகை ஆன்மா – சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர்

சுத்தாவத்தை– ஆன்மா மலங்கள் நீக்கப்படல்.

3. இறைவனும் ஆன்மாவும்
   இரண்டும் உண்மைப்பொருள்
   வரையறை அற்ற அறிவுடையது பதி
   மலங்களால் கட்டுப்பட்டது பசு
   ஆன்மாக்களுக்கு தனு கரண புவன போகங்களை அருளியது பதி
   ஆன்மா சார்ந்ததன் வண்ணமாக இருத்தல்.
   ஆன்மாக்களின் வினையை சேர்த்து வைப்பவன்.

   "செய்வானும் செய்வினையும்
   சேர்பயனும் சேர்ப்பவனும் உய்வானும்
   உளன் என்றுணர்"

   ஆன்மாக்களுக்கு முத்தியளிப்பது இறைவன்.

4. மலங்களை அறுக்கும் வழியும் முத்தியும்

சரியை கிரியை யோகம் ஞானம்

↓

இருவினை ஒபபு

↓

மலபரிபாகம்

↓

சக்தி நிபாதம்

- தாடலை போல கூடியவை தாம் நிகழா
  வேற்றின்பக் கூடலை நீ ஏகன் எனக் கொள்.

02)

1. வேதங்களும் இறைக்கொள்கையும

- இயற்கை வழிபாடு
- மண் விண் இடை சார்ந்த வழிபாடு
- பல தெய்வ வழிபாடு (33 இயற்கைகள்)
- ஒரு தெய்வ வழிபாடு
- ஒரு பொருள் சிந்தனை
  "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி"

2. வேத கால வழிபாட்டு மரபுகள்

- வேள்வி வழிபாடு
- அக்கினி, சோமன், புரோகிதன் முக்கிய இடம் பெற்றனர்.
- ஓமகுண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், தானஸ்துதி பாடுதல், பலியிடல், தானம் வழங்கல், தட்சணை வழங்கல் முக்கியம் பெற்றன
- உலகிய நன்மைகள் பேணப்பட்டன.
- காயத்திரி மந்திர செபம் இடம்பெற்றது.
- யாகங்கள் இடம்பெற்றன.
- பல நாம வழிபாடுகள்
- இசைவழிபாடுகள்
  "தூய்மையான பாடல்கள் தூய்மையான இறைவனைப் போற்றுவோம்."
- மாந்திரீக வழிபாடு

3. ஆலயக்கிரியை அனுட்டானம்

- ❖ ஆன்மா ஈடேற்றத்திற்காக திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியைகளையும் கூறுகின்றது.
- ❖ கோயிலை அடிப்படையாகக் கொண்டு நித்திய நைமித்திய காமியக் கிரியை கூறுகிறது.
- ❖ கர்ஸணம் பிரதிஷ்டை உற்சவம் பிராயச்சித்தம்
- ❖ கிரியை ஆற்றும் விதிகள், பூசை, அலங்காரம், மந்திர உச்சாடனம், யாக குண்ட அமைப்பு, அபிசேக அலங்காரம், உபசாரம் போன்றனவற்றைக் கூறுகிறது.
- ❖ ஆவர்த்தனம், அனாவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம்

4. சித்தாந்த சிந்தனைகள்

- ❖ கிரணம், ரௌரவம், பௌஷ்கரம், சித்தாந்த சிந்தனை அதிகம் கொண்டது.
- ❖ கிரணம் - பதிபடலம் பசுபடலம், மாயாபடலம், சத்திநிபாதபடலம்
- ❖ சரியை, கிரியை, யோகம், ஞானம்
- ❖ குரு லிங்க சங்கம வழிபாடு, தீட்சை வழிபாடு
- ❖ அட்டாங்க யோகம்
- ❖ சுத்தாத்துவைத முத்தி

03)

1. சங்க கால சிவவணக்கம்

➢ சங்க கால நிலங்கள் 5 வகைப்பட்டிருந்தன.

தொல்காப்பியம் → "மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வருணன் மேய தீம்புனல் உலகமும்"

➢ மருதம் - இந்திரன், குறிஞ்சி –முருகன், நெய்தல் - வருணன், முல்லை – மாயோன், பாலை – கொற்றவை

➢ அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், சிவன் பற்றிய குறிப்புக்கள் உண்டு (கடவுள் வாழ்த்துப் பாடல்களில்)

➢ ஆனால் சிவன் சைவம் என்ற சொல் இடம்பெறவில்லை

➢ சிவனைக் குறிக்கும் கருத்துக்கள் உண்டு
திருவிளையாடல் வீரச் செயல்கள் உண்டு
மதுரைக்காஞ்சியில் - ஐந்து பூதங்களைத் தோற்றுவித்தான்.
வேதங்களையும் அங்கங்களையும் தோற்றுவித்தவன்.
சடைமுடி உடையவன், முக்கண்ணன், நீலமணிமிடற்றவன், மாதொரு பாதியன்,
கங்கை அணிந்தவன், ஆலமரத்தின் கீழ் அமர்ந்தவன்

➢ திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, சிறுபாணாற்றுப்படை, புறநானூறு, ஐங்குறுநூறு என்பவற்றில் சிவன் பற்றிய குறிப்புக்கள் உண்டு
பரிபாடல் - சடதாரி (சடையில் கங்கை அணிந்தவன்)
புங்கமூர்பவன் (இடபவாகனத்தில் செல்பவன்)
காய் கடவுள் (காமனை எதிர்த்தவன்)

கலித்தொகை – முக்கணான், ஆலமர் செல்வன்

புறநானூறு – ‘‘முட்கட்செல்வனார் நகர்வலம் செயற்கே’’

2. பல்லவ அரசர்களும் பண்பாட்டு வளர்ச்சியும்

- மகேந்திரவர்மன் - அழியாப் பொருளால் ஆலயம் அமைத்தவன்.
  குடைவரைக் கோவில்களைக் கட்டினான்.
  விசித்திரசித்தன் வியதகு திறத்தோன் சங்கீர்ணஜாதி குணபரன்
  சித்திரகாரப்புலி
  திருச்சிராப்பள்ளி குகைக்கோயில் கல்வெட்டு
  இவனது சைவப்பணியும், குடுமியாமலைச்சிவதோத்திரம் - ஆழ்ந்த சிவபக்தியை காட்டுகின்றது.

- நரசிம்மன் - ரதக்கோயில்.
  பரமேஸ்வரவர்மன் - கூரம் என்ற இடத்தில் சிவன் கோயில் அமைத்து 108 சதுர்வேதிகளுக்கு நிலமளித்தார்.

- 3ம் சிம்மவர்மன் - ஐயடிகள் காடவர்கோன் என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.
- இராஜசிங்கன் - ஆகமப்பிரியன், சங்கபக்தன், சைவசித்தாந்த மார்க்கன், சிவசூடாமணி ரிஷமபலாஞ்சனன்
  சதுர்வேதிமங்கலம் கிருஸ்ணமங்கலம் பெருகி வைதீகக்கல்வி பரவியது.
  புராண இதிகாசக் கதைகள் பரவின.

3. சோழர்கால ஆலயங்களும் பண்பாட்டு வளர்ச்சியும்
   - பண்பாட்டு விருத்தியின் மையமாக அமைவது.
   - கலை வளர்க்கும் அரங்கமாகவும் கல்விச் சாலைகளாகவும் விளங்குகின்றது
   - வேதவிருத்தி புராணவிருத்தி பரதவிருத்திக்கு பரிசில் வழங்கப்பட்டன.
   - ஆலயங்களில் நாயன்மார்களின் குருபூசைதினம் கொண்டாடப்பட்டன.
   - தேவரடியார் (தஞ்சைப்பெரிய கோயில்)400
   - ஓதுவார் நியமிக்கப்பட்டனர் தலைமை ஆசிரியர் தேவநாயகம்
   - மக்கள் ஆலயத்துடன் இணைக்கப்பட்டனர்.

## பகுதி II

1) இலங்கையில் பொலனறுவை கால இந்துசமய வளர்ச்சியை இலக்கியங்கள் தொல்பொருட்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

வரலாற்று மூலங்கள்- தமிழ்மொழி, சிங்களம், சமஸ்கிருதம், பாளி இலக்கியங்கள்

பிறநாட்டார் குறிப்பு

சமஸ்கிருதம் - இதிகாசம், புராணம்
பாளி – மகாபாரதம், சூளவம்சம்
தமிழகத்தில் தேவார திருமுறை கல்வெட்டுக்கள்

பொலநறுவையை சோழர்கள் தலைநகராக்கினர்.

பொலநறுவைக்காலம் (கி.பி 9 – 15 வரை)

பொலநறுவையில் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வழிபாடுகள் சடங்குகள் வளர்ச்சி பெற்றன.

- ✓ தமிழகப் பண்பாடு இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தியது
- ✓ இராஜராஜன் மகன் இராஜேந்திரன் 1017 நாடு முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான்.
- ✓ பொலநறுவை – ஜனநாதமங்கலம்
- ✓ இலங்கையை ஆண்டவர் - சோழ இலங்கேஸ்வரர்
- ✓ பொலநறுவைகால பண்பாட்டை மகாவம்சம், சூளவம்சம், ராஜாவலிய பூஜாவலிய ஆகிய இலக்கியங்கள் மூலமும் கட்டடம், சிற்பம், கல்வெட்டு மூலமும் அறியலாம்.
- ✓ 16சிவன், 10விஸ்ணு, 5காளி கோயில் இவற்றில் வானவன்மாதேவீச்சரம் இன்றுவரை சிறப்பாக உள்ளது. இவ்வாலயம் 2ம்சிவாலயம் எனவும் அழைக்கப்படுகிறது. கலைவனப்பு மிக்கது.
- ✓ சதுர்வேதிமங்கலமும் தோற்றம் பெற்றது.
- ✓ இக்காலத்தில் இந்துக்கலாசாரம் விருத்தியடைந்தது. அரசர்களும் அரசகுடும்பங்களும் சைவசமயத்தில் இருந்தனர்.
- ✓ அரசியலிலும் நிருவாகத்திலும் இந்தியாவினதும் இந்து இலக்கியங்களினதும் செல்வாக்கு.

  அரச ஆவணங்களில் சமஸ்கிருதச் செல்வாக்குக் காணப்பட்டது
- ✓ நானாதேசிகர் வீரவளஞ்சியர் முதலான வணிகக் கணங்களினாலும் அரசபிரதானிகளாலும் கோவில்கள் அமைக்கப்பட்டன.
- ✓ கந்தளாய் மண்டலகிரிய பதவியா மாதோட்டத்திலும் பண்பாடு பரவலடைந்தது.
- ✓ குருணாகல் கல்வெட்டு – விக்கிரம சாளமேகேஸ்வரம்
- ✓ மெடிகிரிய – பண்டித சோழேஸ்வரம்

மிகிந்தலை கல்வெட்டு – ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம் பற்றிக் கூறுகிறது.

இராஜராஜன் சதுர்வேதிமங்கலம் ராஜராஜன் காலத்தில் சிறப்புற்று இருந்தது.

தட்சிணகைலாயபுராணம் - குளக்கோட்டன் பணி பற்றி கூறும்போது
திருமால் அம்மன் கோயிலை அமைத்தமை, நிலங்களை தானம் வழங்கியமை.
"பா தாங்கும் கோயிலும் பொன் மண்டபமும்….." எனும் குறிப்பாலும் இவன் பணி சொல்லப்பட்டது.

தாழிக் குமரன் - திருக்கேதீஸ்வரத்தை புனரமைத்தமை
மாதோட்ட நிலத்தை தானம் வழங்கியமை
பதவியா கல்வெட்டு - காளி கணத்தவர் அமைத்த காளி கோயில் பற்றி கூறுகிறது.
சூளவம்சம் - விக்கிரமபாகு புரோகிதர் மூலம் வேள்விகளையும் இந்துசமயக் கிரியைகளையும் நடாத்தினான் என்று கூறுகிறது.
மகாவம்சம் - மானாபரணனின் அரண்மனையில் வேதங்களில் வல்ல புரோகிதர்கள் ஓமம் வளர்த்து யாகம் செய்தனர்.

பராக்கிரமபாகுவின் பிறந்தநாள் தொட்டு வைதீக சடங்குகள் நடைபெற்றன.

- ❖ 1970, 1908, 1960 பொலநறுவை ஆய்வில் நடராஜர் வடிவம், உமாதேவியார், பார்வதி, விஷ்ணு வடிவம்
  காரைக்கால் அம்மையார், அப்பர், சம்பந்தர், சுந்தரர், வடிவமும் கண்டெடுக்கப்பட்டன.

மாகனது ஆட்சியில் கிழக்கிலங்கையில் தான்தே(கி.பி13ல்)

2) வேதாந்தக் கோட்பாடுகளில் சங்கரரது அத்வைதக் கோட்பாட்டின் அடிப்படைச் சிந்தனைகளை மதிப்பிடுக.

பிரமசூத்திர உரை (பிரஸ்தானத்திரயங்கள்)

↓

சங்கரர் மாபாடியம்

↓

பிரமம் ஆன்மா உலகம்

↓

பிரமம் மட்டும் உண்மை

↓

பிரமம் சத்தியம் ஜகன் மித்தியா ஜீவோபிரமம் ஏவநாஅபர

↓

விவர்த்தவாதம் (உலகம் பொய் தோற்றப்பொருள்)

↓

அவச்சேதவாதம்
பிரதிவிம்பவாதம்
} ஆன்மா (மாற்றப்பொருள்)

↓

மாயாவாதம்

↓

ஆன்மா ஈடேற்றவழி

↓

ஞானம்

↓

ஞானப்பெறவழி

↓

சிரவணம் மனனம் நிருத்தியாசனம்

↓

ஆன்மா அத்துவைத நிலையைப் பெறும்

ஜீவன்முத்தி - விதேகமுத்தி

3) தமிழக வரலாற்றில் பல்லவர் காலக் கட்டடக் கலை வளர்ச்சிப் படிநிலைகளை ஆராய்க?

மகேந்திரவர்மன் பாணி கி.பி 600 – கி.பி 650 வரை

இராஜசிம்மன் பாணி கி.பி 650 – கி.பி 700 வரை
நரசிம்ம பல்லவன் கி.பி 700 – கி.பி 800 வரை
நந்திவர்மன் பாணி கிபி 800 – கி.பி 900 வரை

**குடைத்தளி**

- மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்டது.
  மலைகளைக் குடைந்து, குடை போன்ற அமைப்பில் அமைக்கப்பட்டன.

சீயமங்கலம், திருவல்லம், திருக்கழுக்குன்றம், மண்டகப்பட்டு, மாமண்டூர், சிங்காவரம், மகேந்திரவாடி, திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் காணலாம்.

மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் ஆகிய இடங்களில் பெருமாள் கோயிலையும்

சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், ஆகிய இடங்களில் சிவன்கோவில்களையும் மண்டகப்பட்டில் மும்மூர்த்திகளுக்கான கோவிலையும் (பிரமா, விஷ்ணு, சிவன்) அமைத்தான்.

தூண்கள் 7 அடி 2அடி அகலம் கொண்டதாகக் காணப்படும். தூண் மேலும் கீழும் சதுரமானது.
தூணினை தாமரைமலர் தாங்கிநிற்க, மேற்பகுதி மொட்டுப் போன்ற போதிகை அமைப்பும் உண்டு.
தூணின் புறங்களில் மகேந்திரவர்மனின் பட்டையப்பெயர் பல உண்டு.

**மண்டபக் கோயில்**

- மாமல்லன் காலத்தில் அமைக்கப்பட்டது.
  திரிமூர்த்தி மண்டபம், ஆதிவராக மண்டபம், மகிஷமர்த்தனி மண்டபம், தர்மராஜா மண்டபம்
  குகைக்கோயிலைப் போன்று கர்ப்பக்கிரகம், முன்மண்டபம் என்பன பிரதானமான உறுப்புக்கள்.

- 7 அடி தூண் மேற்புறம், அடிப்புறம் சதுரமாகவும் நடுப்பகுதி எண்கோணமாகவும் கும்பம் மொட்டும் தொங்கும் வகையிலும் காணப்படும்.

- திரிமூர்த்தி மண்டபம் 3 கருவறை கொண்டது.
  சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியோரிற்கு அமைக்கப்பட்டது.

**மலைத்தளி**

- உட்புறம் மட்டுன்றி வெளிப்புறம் செதுக்கி தேர் போல் உள்ளது.

- தர்மராஜன் ரதம், வீமரதம், கணேசரதம் சகாதேவரதம், அர்ச்சுனரதம், கொற்றவைரதம், வடக்குப்பிடாரிரதம், தெற்குப்பிடாரிரதம், வளையாளகுட்டைரதம்

- விமானம் வெவ்வேறு வடிவில் உண்டு.

- தர்மன்ரதம், தெற்குப்பிடாரிரதம் -- திராவிடப்பாணி

- வடக்குப்பிடாரி, வளையான்குட்டை, கொற்றவைரதம் - நாகரபாணியில் உள்ளது.

- தர்மராஜன் ரதம் பெரிய ஆலயம் 42 அடி நீளமும் 32அடி அகலமும் கொண்டது. 40அடி உயரம் ‘‘சிற்பக் கலைக்களஞ்சியம்’’ என அழைக்கப்பட்டது.

**கட்டுத்தளி**

- கல்லை ஒன்றன் மேல் ஒன்றாக கட்டும் மரபு
- மாமல்லபுர கடற்கரைக் கோயில், ஈஸ்வரர் கோயில், முகுந்தன் கோயில், காஞ்சிக் கைலாயநாதர் கோயில்
- மாமல்லபுர கடற்கரைக்கோயில், ஜலசயனக் கோயில் என அழைக்கப்படுகிறது.
- காஞ்சிகைலாசநாதர் கோயில் பெரிய கற்றளி கோயில் என்று அழைப்பர்.
- பூவுலகில் கைலாசம் என்று அழைக்கப்படும் இக்கோயில் வெளிச்சுற்று, உள்சுற்று, மூலவர் கட்டடப்பகுதி என்று மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பிரதான கோயிலைச் சுற்றிப் பல சிறுதுணைக் கோயில்கள் உள்ளன. (58கோயில்கள்)

இக்கோயில் விமானம், மண்டபம், பரிவாரத்தேவர்கோட்டம், சுற்றாலை கோபுரம்

பிரகாரம் என்ற உறுப்புக்களை கொண்டது.

- 16பட்டைகொண்ட லிங்கம் உண்டு.

**நந்திவர்மன் பாணி**

- காஞ்சி முத்தீஸ்வரர், மதஸ்கேஸ்வரர் கோயில் ஒரகடகம் வாடமல்லீஸ்வரர், திருத்தணிகை வீரட்டானேஸ்வரர் கோயில்.

4) இந்து நாகரிக வரலாற்றில் அறவியல் சிந்தனைகள் முக்கியம் பெறுகின்றமையை தர்மசாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

ஒழுக்கவியல் சிந்தனைகளையும் அறச் சிந்தனைகளையும் உள்ளடக்கி நிற்பதே இந்து அறவியல்

- தர்மம் - அறம், ஒழுக்கம், நீதி எனும் ஒத்த பொருளைத் தரும்.
- அறம் என்பது தாங்குவது வழிநடத்துவது
- மனிதன் சுகமாக வாழவும் இன்பம் பெறவும் துணை நிற்பது அறம்

- வேதம் உபநிடதம், கீதை, புராண, இதிகாசம், தர்மசாஸ்திரம் வடமொழி நூல்களும், திருமந்திரம், திருக்குறள், சிலப்பதிகாரம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருமுறை முதலிய தமிழ்நூல்களிலும் காணலாம்.
- தர்மத்துக்கு மூலமானது வேதம் "சுருதி" எனப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு கடமைகளையும் தத்துவங்களையும் கூறுவதனால் ஸ்மிருதி
    - சுருதி – கேட்கப்பட்டது
    - ஸ்மிருதிகள் - நினைத்துச் செய்யப்பட்டது
- எல்லா மனிதர்களாலும் ஆற்றப்பட வேண்டிய கடமைகளை தனிமனித தர்மம், சமூக தர்மம், அரச தர்மம் என்று பலவாறு கூறுகின்றது.
- ஆசார காண்டம், வியாபகாரகாண்டம், பிராயச்சித்தகாண்டம்
- தனிமனித தர்மம் வர்ணாச்சிரம தர்மத்தைக் கூறுகிறது.

- 4 வர்ணத்தார் கடமை
- சமுதாய அமைப்பை ஓர் சீரான தன்மையில் வைத்திருப்பதே இதன் நோக்கம்
- மனு தர்மம் - ஒழுக்கத்தால் வர்ணம் தீர்மானிக்கப்படுகிறது.

➢ ஆச்சிரம தர்மமும் அதன் ஊடாக புருடார்த்த தர்மமும் கூறுகிறது.

➢ சாதாரண தர்மங்களான தூய்மை, தன்னடக்கம், பற்றின்மை, சத்தியம், அகிம்சை பற்றியும் கூறுகின்றது.

➢ மனுதர்மசாஸ்திரம் அரசனின் இயல்புகள், கடமைகள், பொறுப்புக்கள், நீதி பரிபாலனம், நிர்வாகம், வரி அறவிடல் போன்ற விடயங்கள் பற்றிக் கூறுகின்றது.

➢ அரசன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் பற்றியும் கூறுகின்றது.

5) இந்துக்கள் வழிபாட்டோடு மருத்துவ சிந்தனைகளையும் கொண்டிருந்தனர் என்பதனை எடுத்துக்காட்டி இந்து மருத்துவத்தின் முக்கியத்துவத்தினையும் மதிப்பிடுக.

➢ இந்து மருத்துவம் காலத்துக்குக் காலம் கட்டியெழுப்பப்பட்ட துறையாகும்.

➢ இந்துக்களின் மருத்துவக் கலை பற்றிய அறிவு இருக்கு வேதத்தில் ஆரம்பமாகின்றது.

➢ இருக்கு வேதத்தில் உள்ள ஒ‘த்சூக்தம் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் திரிதாது என்று குறிப்பிடுகின்றது.

➢ இம்மருத்துவ சிந்தனைகளை இலக்கியங்களில் மட்டுமன்றி வழிபாட்டு முறைகளிலும் காணலாம்.

தோப்புக்கரணம் போடுதல், நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் போன்றன (நரம்பு மையம் தூண்டப்பட்டு நினைவாற்றலை அதிகரிக்கும்) அட்டாங்க, பஞ்சாங்க வழிபாடு, தலயாத்திரை, மலைகளை ஏறிச் செல்வதனாலும் நாரி இடுப்பு முழங்கால் தசை பலமடைகின்றது. இரத்தச் சுரப்பியில் உள்ள அடைப்புக்கள் நீங்கும். நீரிழிவுநோய் வாத நோய் நீங்கும்.

➢ அறுகு, வில்வம்இலை, துளசி, வேப்பிலை முதலியன மருத்துவத் தன்மை கொண்டது.
யோகாசனம், சூரியநமஸ்காரம், பிராணாயாயம் போன்றன பல்வேறு நோய்களை தீர்க்கவல்லன.

➢ உடம்பில் நாடி நரம்பு சந்திக்கும் இடத்தில் குங்குமம் தரிப்பதால் மஞ்சள் உடம்பினுள் ஊடுருவி, விஷ பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பின் நீக்கிவிடும்.

➢ அரசமரம் சுற்றி வருதல்
காலில் மெட்டியணிதல்

➢ சுக்கில யசூர் குஷ்டம் இருதயநோய் காசநோய் சித்தசுவாதீனம் போன்ற நோய்களைக் கூறுகிறது. இவற்றைப் போக்க மந்திர உச்சாடனம் மருந்தாகக் கூறப்படுகிறது.

➢ அதர்வ வேதம் ஆயுஷ்யாணி, பேஷயாணிசூக்தம் மருத்துவ சிந்தனை அதிகம் கொண்டது.

- சூரியனின் சிவப்புநிறக் கதிர், மஞ்சட் காமாலை நோயைக் குணப்படுத்தும் சக்தி கொண்டது.

- அதர்வ வேதத்தில் மனித உடற்கூற்றியல் குருதிச்சுற்றோட்டம் தொடர்பாக கூறுகிறது.
  நாடிகளில் ஓடும் குருதி அருணா எனவும் நாளங்களில் தங்கி வரும் சிவப்பு குருதி லோஹினி என்கிறது.

- இந்து மருத்துவ அறிவின் வளர்ச்சி கி.மு 1500 – 500 வரையில் அத்திரேயர் தன்வந்திரிஇ சரகர் சுஸ்ருதர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

- இந்திய மருத்துவத்தின் தந்தையாக தன்வந்திரி போற்றப்படுகின்றார்.

- இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை சுஸ்ருதர் குறிப்பிடப்படுகின்றார்.

- சரக சங்கிதை இரத்தம் உடலில் சுற்றி வருதல் அது உடம்பின் ஒவ்வொரு உறுப்பிற்கும் ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்லல் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

- வைத்தியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கம் பற்றியும் சரகர் கூறுகின்றார்.
  நோயாளியின் வீட்டுக்குச் செல்லும் போது உன் பேச்சும் உள்ளமும் அறிவும் புலன்களும் வேறு எங்கும் செல்லாது நோயாளியையும் அவருக்கு வேண்டிய வைத்திய முறையையும் நோக்கி நிற்க வேண்டும்.

- இராமாயணத்தில் சஞ்சீவினி மலையில் இருந்த மூலிகைகள் பற்றிக் கூறப்படுகிறது.
- பல்லவர்காலத்தில்- வெப்புநோய் தீர்த்தமை விஷமுறிவு செய்தமை இறைவழிபாட்டோடு இணைந்திருந்தது.

  மருத்துவர்களுக்கு வழங்கிய மருத்துவப்பேறு நிலம் தொடர்பான கல்வெட்டுச்சான்றுகள்

  சோழர்காலத்தில் - மன்னர்கள் மருத்துவர்களை பேணியமை, மருத்துவமனைகளை அமைத்து மானியம் வழங்கினர். (செங்கல்பட்டு முக்கூடல் விஷ்ணு கோவில் கல்வெட்டு)

  விஜயநகரகாலத்தில் - ஸ்ரீரங்கர் கோயிலில் மருத்துவநிலையம் காணப்பட்டது.

**மருத்துவத்தின் முக்கியத்துவம்**

- எந்த நாட்டிற்கும் ஏற்புடையது
- பக்க விளைவு இல்லாதது.
- தாவரங்கள் உப்பு உலோகங்ளை கொண்டு தயாரிப்பதால் நம்பிக்கை உடையது.
- விபூதி 16 இடங்களில் தரித்தல் அக்குபஞ்சர் வைத்தியத்தோடு தொடர்புபடுகிறது.